இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

**YESUVAI THINAM PARKIREN**

VOL : 26 ISSUE : 07 JULY 2026 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN



ஜீலை
10,11
(வெள்ளி ,சனி)
9.30AM - 2:30PM
செம்பட்டி
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
இடம்:
வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
தேவ செய்தி
Evg.VINCENTRAJ & Evg.KALAVINCENT
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447
Jesus Lives MINISTRIES
ஒட்டன்சத்திரத்தில்
நற்செய்தி
கூட்டம்
11,12
ஜீலை
(சனி, ஞாயிறு)
6:00 PM
9:00 PM
இடம்:
கிறிஸ்தவ மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி பேருந்து நிலையம் அருகில்
ஒட்டன்சத்திரம்
தேவ செய்தி
Evg.VINCENTRAJ & Evg.KALAVINCENT

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். (சங்கீதம் 128:1) என்ற வார்த்தையின்படி அவர் வழியில் நடக்க அனுதினமும் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். கடந்த நாட்களில் ஜூன் 6–ம் தேதி சென்னையில் சகோதரர் ஸ்டீபன் அவர்கள் நடத்திய உபவாச ஜெபத்திலும், அதைத் தொடர்ந்து ஆலந்தூர் லிவ்விங் காட் சபை பாஸ்டர் கிரிஸ்டோ அவர்கள் நடத்தும் ஆராதனையில் கர்த்தருடைய வார்த்தையை கொடுக்க ஆண்டவர் அநுக்கிரகம் செய்தார் அநேகர் தேவ வார்த்தையினால் உயிர்பிக்கப்பட்டார்கள், விடுவிக்கப்பட்டார்கள் தேவனுக்கு மகிமை உண்டாவதாக. அதைத் தொடர்ந்து ஜூன் 13–ஆம் தேதி நடைபெற்ற வானத்தின் வாசல் உபவாச ஜெபத்திலும் தேவன் மகிமை அடைந்தார் அநேக ஜனங்கள் விடுதலையாக்கப்பட்டார்கள், ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தொடர்ந்து இந்த சுவிசேஷ எழுப்புதல் ஊழியத்திற்காக ஜெபிக்க வேண்டும், தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை நாம் எல்லா இடங்களிலும் பரப்ப வேண்டும். அதற்குத்தான் தேவன் சபையை, ஊழியங்களை ஏற்படுத்தினார். நம்மை வளர்த்துக் கொள்ள அல்ல, அவரை உயர்த்த வேண்டும். தொடர்ந்து நாம் நடத்தும் பத்திரிக்கை ஊழியத்தையும், சோஷியல் மீடியா ஊழியத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், அதன் மூலமாக அவர் நாமம் மகிமை அடையவும் கருத்தாக ஜெபியுங்கள். இந்த ஊழியத்தை உங்கள் ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

இயேசுவின் பணியில்

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்

சகோதரர்.
L.வின்சென்ட்ராஜ்



**அப்பொழுது உன் வனாந்தரங்களும், உன் பாழிடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக் குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும், உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள். ஏசாயா 49:19**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த தேவ செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் வனாந்தரத்தில் கேட்க ஆட்கள் இல்லாமல், பார்க்கவும் ஆட்கள் இல்லாமல், ஒருவரும் இல்லாத மனிதனாக காட்டுக்குள் குடியிருப்பது போல் வாழ்கின்ற வாழ்க்கைக்கு பெயர் தான் வனாந்தரத்தில் வாழும் வாழ்க்கையாகும். உங்களுடைய வனாந்தர வாழ்க்கையில் உங்களை சுற்றிலும் குடியிருக்கிறவர்கள் அதிகமாவார்கள், கட்டங்கள் அதிகமாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனாலும் உன்னை விழுங்கியவர்களை தேவன் தூரமாக்குவார், அவர்கள் தூரமாவார்கள்.

விழுங்குதல் என்றால் என்ன? மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவர்கள் நமக்கு மாத்திரைகள் கொடுப்பார்கள். அந்த மாத்திரையை நாம் ரசித்து ருசித்து சாப்பிடுவதில்லை. கண்ணை மூடிக்கிட்டு அப்படியே விழுங்கிய விடுவோம். அந்தக் காலத்தில் சிறுபிள்ளைகளுக்கு வயிற்றுவலி வந்தால் பூச்சிக்கடி என்று சொல்லி வாயை திறக்கச் சொல்லி வேப்பெண்ணெய் ஊற்றி விடுவார்கள். சிறுபிள்ளைகள் அப்படியே விழுங்கி விட வேண்டும். அந்தக் காலத்தில் எந்த ஒரு விஞ்ஞானமும் இல்லை, எந்த ஒரு மெடிசனும் இல்லை. வேப்பெண்ணை நன்றாக வேலை செய்தது.உங்களை முழுங்கினவர்கள் அல்லது விழுங்கினவர்கள் தொண்டைக் குழியில் அப்படியே வைத்திருக்கிறார்கள். அவர்கள் உன்னை விட்டு தூரமாய் போவார்கள்.

சாத்தானுக்கு பற்கள் இல்லை. நீங்கள் சாத்தானை நன்றாக அறிந்திருந்தால் தான் அவனை முற்றிலும் முறியடிக் முடியும். அவனைப் பற்றி தெரிந்திருந்தால் தான் நீங்கள் அவனை ஈஸியாக மேற்கொள்ள முடியும். அவன் எப்படிப்பட்டவன் என்றால் பற்கள் இல்லாத, வயதான கிழவன். அவன் ஒரு காலத்தில் பரலோகத்தில் தேவனைத் துதித்துக் கொண்டிருந்தவன். என்றைக்கு அவன் கீழே விழுந்தானோ, அன்றைக்கே அவனுடைய பற்கள் உடைந்து போய் விட்டது. அதனால் அவன் மெல்ல முடியாது, அப்படியே விழுங்கிவிடத்தான் வேண்டும். இன்றைக்கு சிலரை அவன் விழுங்கி வைத்திருக்கிறான். அவனுடைய வேலை என்னவென்றால் யார் யார் இன்றைக்கு தேவனைத் தேடுகிறார்களோ, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்கிறார்களோ தேவன் மேல் பக்தியாய் இருக்கிறார்களோ, யார் நீதியாய், உண்மையாய் நடக்கிறார்களோ அதை அவனால் தாங்க முடியாமல் அவர்களை அப்படியே அழிக்க வகைதேடி அலைவான். வகைதேடி என்றால் என்ன? ஒவ்வொருவரையும் அப்படியே கண்காணித்துக் கொண்டிருப்பதுதான் வகைதேடுவது.இன்றைக்கு நீங்கள் பார்க்கின்ற, பேசுகின்ற எல்லாரிடத்திலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், சாத்தான் கீழே விழுந்ததினால் கர்த்தரை தேடுகிறவர்களை எப்படி விழுங்கலாம் என்று வகைதேடிச் சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறான். **தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற**

**சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். 1 பேதுரு 5:8-ல்** சொல்லப்பட்டுள்ளபடி நீங்கள் எதைச் செய்தாலும் தெளிவாக, சரியாக செய்ய வேண்டும். தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு காரியத்திலும், தெளிவான ஒரு முடிவை எடுக்க வேண்டும். சாத்தான் தெளிவில்லாதவர்களை எளிதாக அடித்து விடுவான், மடக்கி விடுவான். எனவே தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கு வேண்டும். நீங்கள் எலலாவற்றிலும் விழிப்புணர்வோடு, தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் படுத்திருந்தாலும் உங்களுடைய ஆத்துமாவை விழிப்பாய் வைத்திருக்க வேண்டும். தேவனுடைய சத்தத்தைக் கவனமாய் கேட்க வேண்டும்.புத்தியுள்ள கன்னிகைகளுக்கும் புத்தியில்லாத கன்னிகைகளுக்கும் வித்தியாசம் இருந்தது. புத்தியுள்ள கன்னிகைகளுக்கு பெயர், மணவாட்டிகள். புத்தியில்லாத கன்னிகைகளுக்கு பெயர் மறுமனையாட்டிகள். நீங்கள் புத்தியுள்ளவர்களாக இருந்தால் மணவாட்டியாக இருப்பீர்கள். **இருமனம் உள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்.** சாத்தான் அப்படித்தான் ஒவ்வொருவரையும் நிலையற்றவர்களாய் மாற்றி விடுகிறான். எல்லாரும் இயேசுவை நேசிக்கலாம், எல்லாரும் இயேசுவை பின்பற்றலாம் ஆனால் நீங்கள் மணவாட்டிகளா அல்லது மறுமனையாட்டிகளா என்பது இயேசுவுக்கு மட்டும் தான் தெரியும். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான. சிங்கம் கெர்ச்சிப்பதைப் பார்த்து காட்டில் உள்ள மற்ற மிருகங்களுக்குள் பயம் வந்து விடும், அதுபோல பிள்ளைகளுக்கு பரீட்சை வந்து விட்டால் உடனே பயத்தில் காய்ச்சல் வந்துவிடும். பயம் வந்து உடனே எங்களுக்காக ஜெபியுங்கள் என்று ஜெபிக்க கேட்பார்கள். பிசாசின் வேலையே கெர்ச்சிக்கிறது தான், உன் மகள் படிக்க மாட்டாது, உன் வீட்டுக்காரருக்கு ஒரு வேலையும் தெரியாது. நீ இப்படி போயிடுவாய் என்று சொல்லி உங்களை பயமுறுத்திக் கொண்டிருப்பதுதான். நீங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். விழித்திருங்கள், மணவாட்டியாய் இருங்கள் மறுமனையாட்டியாக அல்ல. உங்களுக்கு விரோதமாய் கெர்ச்சித்து, உங்களை பயமுறுத்துகிற சிங்கத்தைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. இந்த உலகத்தில் கெர்ச்சித்து பயமுறுத்துகிற அவனை காட்டிலும், உங்களோடு இருக்கிறது தேவன் பெரியவர். நீங்கள் சாப்பிடும் போது நிதானமாகச் சாப்பிட வேண்டும். பல்லுக்கு கொடுக்க வேண்டிய வேலையை வயிற்றுக்கு கொடுக்கக் கூடாது. அசைபோடாத மிருகம் எப்படி இருக்குமோ அதைப்போலவே அசைபோடாத பிசாசு, பல் இல்லாத பிசாசு ஜனங்களை விழுங்கிய கொண்டு இருக்கிறான். இன்றைக்கு உங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களை சாத்தான் விழுங்கி வைத்திருக்கிறான். நீங்கள் வீடுகளில் பிள்ளைகளையும், மற்றவர்களையும் பேசும்போது நல்ல வார்த்தைகளை சொல்லி பேச வேண்டும். உங்களுக்கென்று தேவன் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நீங்கள் காணாதபடிக்கு, கேளாதபடி சாத்தான் மறைத்து வைத்திருக்கிறான், இந்த உலகம் மறைத்து வைத்திருக்கிறது, தேவத்திட்டத்தை மறைத்து வைத்திருக்கிறான். இன்றைக்கு தேவன் உங்களுக்கு வைத்திருக்கிற நன்மையை, தேவ திட்டத்தை முடக்குகிறதற்கு சாத்தான் அதை விழுங்கி வைத்திருக்கிறான். அது இன்னும் உள்ளே இறக்கவில்லை, தொண்டையில் நான் இருக்கிறது. ஏற்ற வேளையில் வெளியில் வரும்படி தேவன் செய்வார்.யோசேப்பு எகிப்திலிருந்த காலத்தில் பார்வோனுக்கு ஒரு சொப்பனம் வந்தது. **அப்பொழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது. அவைகளின்பின் அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து, நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையிலே நின்றது. அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப்போட்டது; இப்படிப் பார்வோன் கண்டு விழித்துக்கொண்டான். ஆதி 41:2-4.** தேசத்தில் நடக்கப்போகிறதான ஆபத்தை குறித்து கர்த்தர் பார்வோனோடு பேசி, எகிப்து தேசத்தை தேவன் காப்பாற்றினார். பார்வோன் தேவனை நம்பாத மனிதனுக்கே தேவன ஆசீர்வாதம் தருவார் என்றால் கர்த்தரே வழி என்று அவரையே நம்பி நிற்கிற உங்களுக்கு ஒரு அற்புதம் கட்டாயம் நடக்கும். இன்றைக்கே அந்த அற்புதம் உங்கள் வாழ்க்கையில் நடக்கும்.

வரி வசூலிக்கிறவன் வந்து பேதுருவிடம் உங்கள் போதகர் வரி பணம் செலுத்துகிறது இல்லையா? என்று கேட்டான். நீங்கள் ஜெபம்

பண்ணினால்வரிப்பணம் செலுத்தமாட்டீர்களா? உங்களுக்கு வர வேண்டிய ஆசீர்வாதங்களை அபகரிக்க இந்த உலகத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். இயேசு பேதுருவிடம் நீ கடலுக்கு போய் தூண்டில் போட்டு முதலில் அகப்படும் மீனைப் பிடித்து அதன் வாயைத் திறந்து பார். அதில் ஒரு வெள்ளிப்பணத்தை காண்பாய், அதை எடுத்து உனக்காகவும், எனக்காகவும் வரியை செலுத்து என்று சொன்னார். சாத்தான் நம்மை விழுங்க வகைதேடி அலைந்து கொண்டிருக்கிறான். யார் யார் உங்களை விழுங்கினார்களோ அவர்கள் எல்லோரும் உங்கள் வீட்டை விட்டு புறப்பட்டு போவார்கள். உங்கள் வருமானத்தை, தொழிலை, ஆசீர்வாதத்தை திருடினவன் உங்களை விட்டு ஓடிப்போகப் போகிறான். உத்தமனுக்கு கர்த்தர் துணை. சாத்தான் எவைகளை விழுங்கினான் என்று இப்பொழுது பார்ப்போம

## பரிசுத்தமானது விழுங்கப்பட்டது

**பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும், மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும். நீதி 20:25.** பரிசுத்தமானதை நாம் விழுங்கக் கூடாது. உதாரணத்துக்கு ஜெபம்பண்ணு என்று சொன்னால் நான் அப்புறமேல் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்வது. நம்முடைய பெலவீனத்தில் நமக்கு பெலன் தர தேவன் நம்மோடு இருக்கிறார். பரிசுத்தமானவைகளை விழுங்கக்கூடாது. பன்றிகள் முன்பாக முத்துக்களைப் போடக்கூடாது, போட்டால் அது பீறிப்போட்டு விடும்.



சாத்தான் விழுங்கிய அத்தனை நன்மைகளையும் ஆண்டவர் திரும்ப கக்கப்பண்ணப் போகிறார். **கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. யோனா 2:10** யோனா தேவசித்தத்திற்கு மாறாக ஆண்டவர் போகச் சொன்ன இடத்திற்குப் போகாமல் தர்ஷீசுக்கு கப்பல் ஏறிப்போன போது கடலில் கொந்தளிப்பு உண்டானது. அது அடங்கும்படியாக அவர்கள் யோனாவை எடுத்து கடலில் போட்டார்கள். இந்த பாதகத்தை எங்கள் மீது சுமத்தாதிரும் என்று சொல்லி ஆண்டவரிடம் கெஞ்சினார்கள். கர்த்தர் அங்கேயே ஒரு மீனை ஆயத்தப்படுத்தி இருந்ததால் அது அவனை மூன்று நாள் தன் வயிற்றிலே வைத்திருந்தது. அதனால் அந்த மீன் உமிழ் நீர் கூட விழுங்க முடியவில்லை. அந்த மீன் எவ்வளவு கவனமாக கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தது. யோனா மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்தார்.. அங்கிருந்து ஆண்டவரே கடல்பாசி என்னை சூழ்ந்த கொண்டது என்றும்,. மரணத்தின் விளிம்பில் இருக்கிறேன் என்றும் சொல்லி அவன் ஜெபிக்கிறான். நீங்கள் நன்றாக இருக்கும் காலத்தில் ஜெபிக்காமல் இருந்தீர்கள் என்றால், தீங்கிற்கு உங்களை அர்ப்பணித்து தான் ஆண்டவர் உங்களை கொண்டு வருவார். மண்ணானது தான் இருந்து மண்ணுக்கும், ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்கும் திருப்புவது போல் தீங்கு வராததற்கு முன்பு, மருத்துவமனைக்கு போவதற்கு முன்பு, நீங்கள் நன்றாக இருக்கும் போது கர்த்தரைத் தேடுவது நல்லது, ஜெபம் பண்ணுவது நல்லது. நன்றாக இருக்கும் காலத்தில் கர்த்தரை தேட நேரமில்லை என்கிறீர்கள் தீங்கு நாட்களில் தேவஊழியரை கூப்பிட்டு உங்களுக்காக ஜெபிக்க சொல்லுகிறீர்கள். கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார் அது யோனாவை கரையில் கக்கி விட்டது. சாத்தான் விழுங்கிய அனைத்தையும் தேவன் உங்கள் மடியில் கக்கப்பண்ணுவார். உங்களுக்குள்ளதை அவன் அபகரித்துக் வைத்திருக்கிறான். அவனிடத்திலிருந்து பறித்து தேவன் உங்களுக்குத் திரும்ப கொடுப்பார். **உம்மை அறியாத ஜாதிகளின் மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின் மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்; அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே. எரே 10:25. ஆபகூக் 1:13-ல் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன்**

**தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?** துன்மார்க்கன் நீதிமானை விழுங்கப் பார்க்கிறான். துன்மார்க்கனுக்கு முடிவு கட்ட இயேசு சீக்கிரம் இந்த பூமிக்கு வரப்போகிறார். இயேசுவின் தலையில் முள்முடி வைக்கப்பட்டபோது சாத்தானின் தலை உடைக்கப்பட்டு போயிற்று. எப்படி உடைந்தது என்றால் எரேமியா **51:44-ல் நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்.** சாத்தான் விழுங்கினதை அவன் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன் என்று தேவன் சொல்லுகிறார். உங்களுக்கு வரவேண்டிய நன்மையை யாரோ ஒருவர் வாங்கி விட்டார்கள். அந்த வேலையை வேறொருவனுக்கு கொடுத்து விட்டார்கள். அந்த தொழிலை வேறொருவன் அபகரித்து விட்டான். அந்த இடத்தை வேறொருவன் வாங்கி விட்டான் என்று சொல்லி புலம்புகிறீர்களா?. இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார் நீங்கள் இழந்த அத்தனை ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்குத் திரும்ப தருவார். அவன் விழுங்கியதை திரும்ப கக்கப் பண்ணுவார், இனி தரித்திரம் உங்கள் வாழ்க்கையில் வருவதில்லை, சாபம் உங்கள் வாழ்க்கையில் வருவதில்லை, பணப்பற்றாக்குறை உங்கள் வாழ்க்கையில் வருவதில்லை.

"பிரியமானவனே
உன் ஆத்துமா வாழ்கிறது போல
நீ எல்லாவற்றிலும் வாழ்த்து
சுகமாயிருக்கும்படி
உன்னை வேண்டுகிறேன்."

## மரணமானது ஜீவனாலே விழுங்கப்பட்டது

**அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும் போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். 1 கொரி 15:54**

**அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார். ஏசாயா 25:8** இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயமாக விழுங்கி விட்டார். இன்றைக்கு அந்த ஆண்டவர் மரணத்திற்கு அதிகாரியாக இருந்த பிசாசானவனை விழுங்கி விட்டார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலிருந்து அவர்களுடைய கண்ணீர்கள் யாவையும் துடைத்து. அவர்கள் தேவனாயிருப்பார். இன்றைக்கு தேவன் அநேகருக்கு வியாதியிலிருந்து சுகம் தந்து இருக்கிறார். ஒரு மனிதனுக்கு அழிவு, ஆபத்து, மரணம் எப்பொழுது வரும் என்று தெரியாது. ஆனால் நீங்கள் இயேசுவை அறிந்திருந்தீர்களானால் அந்த இயேசு உங்களுக்கு வரவேண்டிய தீமையை, சாத்தானை விழுங்கி விடுவார். **அவர் வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் உங்களை தப்புவிப்பார்.** அதற்குத்தான் அவர் உயிரோடு இருக்கிறார், வாழ்கிறார். இன்றைக்கு அந்த ஆண்டவர் உங்களுக்கு வரவேண்டிய நன்மையை, ஆசீர்வாதத்தை, சாத்தான் விழுங்கி இருக்கிறதை அவனை அழித்து ஒவ்வொன்றாக உங்களுக்குத் திரும்ப கிடைக்கச் செய்து அவனுக்கு முன்பாக உங்களை உயர்த்துவார். உங்களை ஐசுவரியவானாக்குவார், இழந்ததை திரும்ப பெறுவீர்கள். **இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்து போடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். 2 கொரி 5:4.** மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்கு ஏதுவானது. ஜீவனை மரணம் விழுங்கவில்லை, மரணத்தை ஜீவன் விழுங்கி விட்டது. நீங்கள் ஜெபிக்கும் போது உங்கள் ஆத்துமா ஜீவன் பெருகிறது.

**பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்த்து சுகமாயிருக்கும்படி உன்னை வேண்டுகிறேன்.** ஜீவன் வர வர நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற, சரீரத்தில் இருக்கிற எல்லாம் பலவீனங்களும் மாறுகிறது. பெலவீனத்தில் பெலன் கொண்டார்கள். சாராள் கர்ப்பந்தரிக்க பெலன் இல்லாத போதும் அவரை விசுவாசித்தாள். எனக்கு கர்த்தர் சொன்ன வார்த்தை கண்டிப்பாக நிறைவேறும் என்று விசுவாசித்தப்படியே அவளுக்கு நடந்தது. இந்த மரணத்தை விழுங்கின தேவன் இன்றைக்கும் ஜீவனோடு இருக்கிறார். அவர் தான் தீச்சூளையின் நடுவில் மூன்று வாலிபர்கள் இருக்கும் போது ஒரு தீ கூட அவர்கள் மேல் படாமல் அவர்களை பாதுகாத்தார். அவர்களுக்கு ஏசியாக அவர் மாறிவிட்டார். சிங்கெபியில் தானியேலை விழுங்க காத்திருந்த சிங்கத்தின் வாயை தேவன் கட்டிப்போட்டார். ராஜாவுக்கு முன்பாக தானியேலை அவதூறாக சொன்னவர்களை சிங்கங்கள் விழுங்கிப் போட்டது. உங்களுக்கு வியாதி வந்தால் நீங்கள் பயப்படாதீர்கள், உங்கள் வியாதியை பார்த்துப் பயப்படாமல் தைரியமாக இருக்க வேண்டும், வியாதி வந்து விட்டால் உடனே ஜெபிக்க வேண்டும். ஜான்வெஸ்லி என்ற ஒரு தேவஊழியர் இருக்கிறார். அவர் அநேக மரித்தவர்களை உயிரோடே எழுப்பி இருக்கிறார். அவருடைய மனைவி திடீரென்று நோய்வாய் பட்டு இறந்த விட்டார்கள். அவர் வெளி தேசத்தில் ஊழியத்தில் இருந்தார். நான் வரும் வரைக்கும் என் மனைவியின் சரீரத்தை அடக்கம் பண்ண வேண்டாம் என்று சொல்லி விட்டார். மூன்று நாட்கள் கழித்து வீட்டிற்குள் சென்று தன் மனைவியை பார்த்துக் பேசினார். நான் வீட்டிற்குள் வந்திருக்கிறேன் வாங்க என்று கேட்காமல் இப்படி படுத்திருக்கிறாய் என்று சொல்லி விட்டு இயேசுவின் நாமத்தினாலே தன் மனைவிக்காக ஜெபித்த போது அவர்கள் மீண்டும் உயிரோடு எழும்பி விட்டார்கள். ஒவ்வொரு வருடமும் உங்களை அற்புதமாய் நடத்துகிற தேவன் உங்களோடு இருக்கிறார். எந்த சாத்தான் உங்களுடைய ஆசீர்வாதங்களை விழுங்கி இருக்கிறானோ அவன் இன்றைக்கு உங்களை விட்டு ஓடிப் போகிறான். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். அடங்காத உங்கள் பிள்ளைகள் அடங்குவார்கள். வழிதப்பி போன கணவர் மனம் திரும்பி வருவார். மீனின் வயிற்றுக்குள் போன யோனாவை அற்புதமாய் வெளியே கொண்டு வந்த ஆண்டவர், மீனின் வாயிலிருந்து வெள்ளிப் பணத்தை வெளியே கொண்டு வந்தவர், இன்றைக்கு உங்களை ஆசீர்வதித்து, அற்புதமாய், அதிசயமாய் நடத்த போகிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே நீங்கள் இழந்த அத்தனை நன்மைகளையும், ஆசீர்வாதங்களை திரும்ப கொடுத்து உங்களை உயர்த்துவாராக.


'என் பிள்ளைகள்'
ஆசீர்வாத ஜெபத்திட்டம்

1. உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.
2. உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க,
3. அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற
4. வயதுவரம்பு 24 வரை

இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள்
9442800449, 9442800447
Watsapp மூலம் இணைய 9442800447

இன்றே இணைந்திடுங்கள் உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.




# நான் இஸ்ரவேலுக்குப் பனியைப் போல் இருப்பேன்



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள் நம் ஆண்டவர் இஸ்ரவேலாகிய நம்மேல் பனியைப்போல் இறங்கி வந்து நம்மை ஆசீர்வதிக்கிறவர். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தபோது ஆண்டவர் அதை சிருஷ்டித்தார். அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி பூமியையெல்லாம் நனைத்தது என்று வாசிக்கிறோம். மழை பெய்யவில்லை, புல் பூண்டுகள் முளைக்கவில்லை. அதற்கு முன் மகா வறட்சியாய் இருந்த அந்த பூமியில் மூடுபனி நனைத்ததும் புல் பூண்டுகள் முளைக்க ஆரம்பித்தது. அந்த மூடுபனி யார் என்றால் **ஓசி 14:5-ல் நான் இஸ்ரவேலுக்கு பனியைப்போல் இருப்பேன், அவன் லீலிபுஷ்பத்தைப் போல் மலருவான், லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பான்** என்று தேவன் சொன்னார். இதற்கு முன் நம்முடைய வாழ்க்கையில் வறண்டதாகவும், ஒன்றுமில்லாததாகவும், வெறுமையாயும் தான் நாம் இருந்திருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட நம்மேல் ஆண்டவர் பனியைப்போல் இறங்கி நனைக்கிற போது நமது வாழ்க்கை செழிக்கும். ஈசாக்கினிடத்தில் யாக்கோபு ஆசீர்வாதத்தை வாங்கிச் சென்ற போது **ஆதி 27:28-ல் தேவன் உனக்கு வானத்துப்பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து மிகுந்த தானியத்தையும், திராட்சரசத்தையும் தந்தருளுவாராக என்று ஆசீர்வதிக்கிறான்.** அதே ஆசீர்வாதத்தை நமக்கும் தந்தருளி நம்மையும் ஆசீர்வதிக்கவும், செழிக்கவும் செய்வார். ஏனென்றால் அவரே நமக்கு பனிபோல பெய்யும் பரிசுத்தர், நம்மேல் இறங்கி நம்மை ஆசீர்வதிப்பார்.

## புல்லின் மேல் பெய்யும் பனி

எஸ்தரின் சரித்திரத்தில் யூதகுலமெல்லாம் அழிய வேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தார். எஸ்தர் ஒரு யூதபெண்ணாயிருந்ததினாலே தானும், தன் ஜனங்களும் அழியப் போகிறோமே என்று கலக்கத்தோடு ராஜாவினிடத்தில் போகிறாள். **நீதி 19:12 ராஜாவின் கோபம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்கு சமானம். அவனுடைய தயை புல்லின் மேல் பெய்யும் பனிபோலிருக்கும்** என்று சாலமோன் சொல்வது போல ராஜா அழைக்காமல் அவரிடத்தில் போனால் சாக வேண்டும் என்று சட்டம் இருந்தாலும், ராஜாவின் இரக்கத்தைப் பெற தைரியமாய் ராஜசமூகத்தில் பிரவேசிக்கிறாள். ராஜாவின் தயை புல்லின் மேல் பெய்கிற பனியைப் போல் அவளுக்கு ராஜாவினிடத்தில் தயையும் பட்சமும் கிடைத்தது. அழிவிலிருந்து அவளும், அவள் ஜனமும் காப்பாற்றப்பட்டது. அதைப் போல ஆண்டவருடைய கோபம் என்மேல் இருக்கிறதே நான் ஆண்டவரிடத்தில் போகமுடியாது. ஆண்டவர் என்னைத் தண்டித்து விடுவார் என்ற குற்றமனட்சாட்சியோடு இருக்காமல் தைரியமாய் நம்மை தாழ்த்தி ஆண்டவரிடம் வந்து இரக்கத்தையும், தயையும் பெறுவோம். எஸ்தருக்கு ராஜா தயை செய்தது போல இன்றைக்கு இயேசு ராஜாவிடம் நாம் வரும் போது அவருடைய கோபமல்ல, தயை நமக்கும் புல்லின் மேல் இறங்குகிற பனியைப்

போலிருக்கும் ஏசா 40:6-8 —ல் பின்னும் **கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து, பூ உதிரும்; ஜனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது. ஏசாயாவிடம் ஆண்டவர் ஒரு காரியத்தை கூப்பிட்டுச் சொல் என்றார்.**
மாம்சமெல்லாம் புல்லைப்போல, அதின் மேன்மையெல்லாம் பூவைப்போல என்று சொல். புல் உலர்ந்து, பூ உதிர்ந்து போகும், என் வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதைச் சொல்லச் சொன்னார். மாம்சம்தான் ஜனம்தான் நாம்தான் புல். இந்த புல்லின் மேல் என் வசனம் இறங்கும் என்று ஆண்டவர் சொன்னார்.
**ஏசா 55:10,11-ல் மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து அதில் முளைகிளம்பி விளையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்.
அது வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல் அது தான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும் என்றும் ஆண்டவர் சொல்கிறார்.** வானத்திலிருந்து மாரியும் உறைந்த மழையும் எப்படி பெய்த உடனே புல் பூண்டுகளை முளைபித்து விடுகிறதோ அதேபோல என் வாயிலிருந்து ஒரு வசனம் புறப்பட்டால் அது வெறுமையாக என்னிடத்தில் திரும்பாமல் நான் விரும்புகிற காரியத்தை அவர்களுக்கு செய்து, நான் எதற்காக அவர்களை நோக்கி அனுப்புகிறேனோ அந்த காரியமாக அது வாய்க்கும் என்றார்.
நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று ராஜாவின் குமாரன் வியாதியாயிருக்கும்போது இயேசு சொன்னார். அந்த வார்த்தையின்படியே அந்த மகன் சுகம் அடைந்தான். லாசருவே வெளியே வா என்று அவர் சொன்ன வார்த்தை, எதை விரும்பி சொன்னாரோ அது நிறைவேறியது நடந்தது. நம் வாழ்விலும் அவர் அந்த வார்த்தையை அனுப்பின காரியமாய் அது வாய்க்கும். அது புல்லின் மேல் இறங்குகிற பனியைப் போல் இறங்கி அனுப்பின காரியமாய் வாய்க்கும்.
**உபா 32:1,2-ல் மோசே எழுதின, பாடின பாட்டு வானங்களே செவி கொடுங்கள் நான் பேசுவேன், பூமியே என் வாய் மொழிகளை கேட்பாயாக, மழையானது இளம் பயிரின் மேல் பொழிவது போல என் உபதேசம் பொழியும் பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவது போல என் வசனம் இறங்கும் என்று பாடுகிறதை நாம் வாசிக்கிறோம்**
ஏனென்றால் வனாந்தரத்தில் லட்சக்கணக்கான மக்களை வழிநடத்திக் கொண்டு போன மோசே ஏலீமை விட்டு சீனாய் வனாந்தரத்தில் வந்த போது ஜனங்கள் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்து நாங்கள் எகிப்திலே இறைச்சி பாத்திரங்களண்டையில் உட்கார்ந்து அப்பத்தை திருப்தியாய் சாப்பிட்டோம். கர்த்தரின் கையால் செத்துப் போயிருந்தாலும் பரவாயில்லை, இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களை புறப்படப் பண்ணினீர்கள் இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்கள் என்று முறுமுறுத்த போது கர்த்தர் வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணுவேன் என்றும், எப்படி அவர்கள் அதை சேகரிக்க வேண்டும், எந்த நாளில் சேகரிக்கனும், எப்பொழுது போகக் கூடாது எல்லாம் சொன்னார்.
விடியற்காலத்தில் என் மகிமையை காண்பீர்கள், சாயங்காலத்தில் இறைச்சியையும், விடியற்காலத்தில் அப்பத்தையும் அவர் கொடுப்பார். நீங்கள் அதை காண்பீர்கள் உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல கர்த்தருக்கே விரோதமாக இருக்கிறது என்றார்கள்.
**யாத் 16:13,14-ல் சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளையத்தை மூடி கொண்டிருந்தது, விடியற்காலத்தில் பாளையத்தை சுற்றிலும் பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கின பின் இதோ**

வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டி பொடியத்தனையாய் தரையின் மேல் கிடந்தது. இது என்ன என்று இஸ்ரவேலர் விசாரித்து. கர்த்தர் நமக்கு புசிக்க கொடுத்த அப்பம் என்று கர்த்தர் சொன்னபடியே அதை சேர்த்து கொண்டார்கள்.உண்டார்கள். வானத்திலிருந்து பனியை போல் கர்த்தர் புசிக்க கொடுத்த அப்பம் இறங்கினது. **31-ம் வசனத்தில் இஸ்ரவேலர் அதற்கு மன்னா என்ற பெயரிட்டார்கள் அது கொத்தமல்லி அளவாயும் வெண்மை நிறமாயும் இருந்தது. அதின் ருசி தேனிட்ட பனியாரத்திற்கு ஒப்பாயிருந்தது. புது ஒலிவ எண்ணெயின் ருசியைப் போல் இருந்தது** என்றெல்லாம் வாசிக்கிறோம். **எண் 11:9-ல் இரவிலே பாளையத்தின் மேல் பனி பெய்யும் போது மன்னாவும் அதன் மேல் விழும் என்று வாசிக்கிறோம். இதை பார்த்த மோசே புல்லின் மேல் பனி இறங்குவது போல என் வசனம் என் அப்பம் இறங்கும் என்று பாடினான்.** அதே வசனம் இன்றைக்கும் கோடிக்கணக்கான மக்களாகிய புல்லின் மேல் இறங்கி கொண்டு இருக்கிறது. என் மேலும், உங்கள் மேலும் இறங்குகிறது. இந்த வார்த்தை நமக்கு ஜீவனாய் இருக்கிறது. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறது. சிருஷ்டிக்கிறது. செங்கடலைப் பிளக்கிறது. யோர்தானை பிரிக்கிறது. எரிகோவை தகர்க்கிறது. பாவியை நீதிமானாக மாற்றுகிறது.

**சங்கீதம் 107 19 20-ல் தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள் அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்களாக்கி இரட்சிக்கிறார். அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி, அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார்** என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நாம் எந்த ஆபத்தில் கூப்பிடுகிறபோது தமது வசனத்தை அனுப்பி, அனுப்புகிற காரியமாகும்படி வாய்க்கச் செய்து அழிவுக்கு தப்புவிக்கிறார். கிதியோன் இந்த பனியை கேட்டான். மீதியானியர் வந்து இஸ்ரவேலை அழித்துப் போட்டபோது, மீதியானியர் கையில் இருந்து இஸ்ரவேலை மீட்பாய் என்று ஆண்டவர் சொன்னபோது ஒரு அடையாளமாக **நியாயா 6:36-40-ல்** தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை இரட்சிக்க வேண்டுமானால் நான் மயிருள்ள ஒரு தோலை களத்தில் போடுகிறேன் பனி தோளின் மேல் மாத்திரம் பெய்து பூமி எல்லாம் காய்ந்து இருந்தால் அப்பொழுது நம்புவேன் என்றான். அப்படியே ஆயிற்று மறுநாள் காலையில் வந்து தோலை கசக்கி அதிலிருந்து பனி நீரை ஒரு கிண்ணம் நிறைய பிழிந்து எடுத்து. இன்னும் ஒரு விசை கேட்கிறேன் தேவனாகிய நீர் கோபப்பட வேண்டாம் தோல் மாத்திரம் காய்ந்து இருந்து பூமி முழுவதும் பனி பெய்திருக்கவும் கட்டளை இடும் என்றான். அப்படியே தேவன் அன்று இராத்திரி செய்தார் தோல் மாத்திரம் காய்ந்திருந்தது பூமி எல்லாம் பனி பெய்திருந்தது. ஒரு மனிதனுக்காக, மனிதனைக் கொண்டு செய்யும் காரியத்திற்காக தேவன் பனியை எங்கும் பெய்ய வைக்கனுமோ அங்கு பெய்ய வைத்தார். இன்றைக்கு நமக்கும் எதன்மேல் இந்த பனி இறங்கனும் என்று நாம் கேட்கிறோமோ, அதன் மேல் இறங்கச் செய்து நமக்காக, நம்மைக் கொண்டு செய்ய வேண்டிய காரியத்தை செய்ய அங்கே தம் பனியைப் போன்ற வசனத்தை அனுப்புகிறார். மரியாளை மறைவாக விலக்கிவிட யோசேப்பு நினைத்தபோது உன் மனைவியாகிய மரியாளை ஏற்றுக்கொள் பயப்படாதே. அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால் தான் என்று அவரது சந்தேகத்தை, குழப்பத்தை தீர்த்து, தீமைக்கு தப்புவிக்க இந்த பனி யோசேப்பின் மேல் இறங்கியது. நீங்களும் இந்தப் பனி என் குடும்பத்தின் மேல், பிள்ளைகள் மேல் இறங்கட்டும். பிள்ளைகள் படிப்பில், எதிர்காலத்தில், அவர்கள் வேலையில், வருமானத்தில் இறங்கும். நீங்கள் எதில் பனி இறங்கட்டும் என்கிறீர்களோ அதில் அந்த பனி இறங்கும். கிதியோன் கேட்டபோது எதில் பனி இறங்கட்டும் என்றாரோ, அதில் இறங்கிய பனி, நம் வாழ்விலும் இறங்கும்.

## விடியற்காலத்து கர்ப்பத்தில் பிறக்கும் பனி

விடியற்காலத்தில் பனி மிகவும் தூய்மையாக இருக்கும். வெயில் ஏற ஏற அது உருகும். சங் 110:3-ல் உமது பராக்கிரமத்தின் நாளிலே

உம்முடைய ஜனங்களை மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள். விடியற்காலத்து கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்கு சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் (அழகான ஜனம்) உமக்கு பிறக்கும் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். எப்போது சத்துருக்களை பாதபடியாக்கி போடும் வரை, தமது செங்கோலை அனுப்பி சத்துருக்களை ஆளுகை செய்து பராக்கிரமமாய் தன் ஜனங்களை சத்துருக்களின் கையில் இருந்து விடுவிக்கும்போது, அவர்கள் பரிசுத்தமும் மனப்பூர்வமான அலங்காரமாயிருப்பார்கள். அதற்கு ஒரு பெயர் யௌவன ஜனம், விடியற்காலத்துப் பனி என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். இதுவரை சத்துருவோடு நாம் போராடியிருக்கலாம், நமது பரிசுத்தத்திற்காக பாடுகள், எத்தனையோ போராட்டங்களை சந்தித்து நம்மை தமது பராக்கிரமத்தால் மீட்டு விடியற்காலத்து பனியைப் போல நம்மை மாற்றுவார். **ஏசா 1:18,19-ல் உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும். நீங்கள் மனம் பொருந்தி செவி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.** நம்மை பரிசுத்த சந்ததியாய் மாற்ற இயேசு கிறிஸ்து தமது தூய இரத்தத்தை சிந்தினார். அவரது பராக்கிரமத்தினாலேயே நாம் மனப்பூர்வமும், பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாய் அழகான ஜனமாக மாறுகிறோம். நாம் மனம் பொருந்தி செவி கொடுத்தால் விடியற்காலத்து பனியைப் போல தூயவர்களாக முடியும்.

> “நான் உன்னோடு இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வர பண்ணுவேன், நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை”

## இஸ்ரவேலின் மேல் இறங்கின பனி

கர்த்தர் யாக்கோபோடு அநேக வார்த்தைகளைப் பேசினார். ஏசா 9:8-ல் ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார். அது இஸ்ரவேலின் மேல் இறங்கிற்று யாக்கோபு அண்ணனை ஏமாற்றி ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலையில் ஒரு இடத்தில் கல் ஒன்றை தலைக்கு வைத்து படுத்திருக்கும் போது **ஆதி 28:15-ல் நான் உன்னோடு இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வர பண்ணுவேன், நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை** என்றார். நீ படுத்திருக்கிற இந்த பூமியை உனக்கும், உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி நான்கு திசைகளிலும் பரம்பும். உனக்குள்ளும், உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்கலெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்றார். அது அப்படியே அவன் மேல் இறங்கிற்று, அவன் பல வருடமாய் அடிமையாய் வேலை பார்த்தான், நெருக்கங்களை அனுபவித்தான், ஏமாற்றப்பட்டான். ஆண்டவர் அவனை நீ அந்த இடத்திலிருந்து புறப்பட்டு உன் இனத்தாரிடம் போ, உனக்கு தரிசனமான தேவன் நானே என்று, ஆண்டவர் போன இடத்திலிருந்து திரும்பி வரப்பண்ணுவேன் என்று சொன்னபடியே செய்தார். அந்த வார்த்தை இஸ்ரவேல் மேல் இறங்கிற்று. அதன் பிறகு போராடி ஜெபித்து இஸ்ரவேல் என்னும் பெயரை பெற்று, அவனுக்குள்ளும், அவன் சந்ததிக்குள்ளும் வம்சங்கலெல்லாம் ஆசீர்வதிக்கப்பட இன்று வரை தேவன் செய்கிறார்.அதே தேவன் நமக்கும் பல வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். அது நிறைவேறாதது போல, எல்லாம் எதிர்மறையாய் நடப்பது போல, தாமதமானது


போல நமக்கு இருக்கலாம். ஒரு வேலை நம்முடைய குறைவினால் கூட சில சிட்சைகள் நமக்கு ஏற்பட்டிருக்கலாம். எப்படி இருந்தாலும் நம்மை முந்தின நிலைக்கு திரும்பி வர பண்ணுகிறவர் நம்மோடிருக்கிறார்.
ஆகாய் 1:9,10-ல் என் வீடு பாழாய் கிடைக்கும் போது அவனவன் தன் தன் வீட்டிற்கு ஓடிப் போகிறீர்களே, இதினிமித்தம் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் ஆதலால் உங்கள் மேல் இருக்கிற வானம் பனியைப் பெய்யாமலும், பூமி பலனைக் கொடாமலும் போயிற்று. அனைத்தின் மேலும் வறட்சியை வருவித்தேன் என்றார். ஒரு தண்டனை, சிட்சை, சாபமான காரியமாக கூட இது இருக்கிறது. எதனால்? தேவனுடைய காரியங்களில் நாம் கவனம் செலுத்தாமல் போனது தான். மலைகளில் ஏறிப்போய் மரங்களை வெட்டி வந்து ஆலயத்தை கட்டுங்கள் என்பது ஆண்டவரின் வீட்டின் வேலை. ஜெபத்திலோ, நம்முடைய சுவிசேஷ வேலையிலோ, நாம் மனிதர்களை சந்தித்து அவர்களை ஆலயமாக்குவது நமது வேலை. அதைச் செய்யாமல் நாம் நமது காரியமாய் செயல்படும்போது தேவன் நம்மேல் வானத்துப் பனியை பெய்யாமலும், பூமி பலனைக் கொடாமலும் இருக்கிறது போன்ற வறட்சியை, சில பாடுகளை நமக்கு அனுமதிக்கிறார்.
ஆண்டவர் எச்சரித்து சொன்ன வார்த்தையை ஆகாய் 9:12,13-ல் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோசதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனும், ஜனத்தில் மீதியான அனைவரும் தங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பின ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்கும் செவி கொடுத்தார்கள். கர்த்தருக்கு முன்பாக பயந்திருந்தார்கள். அப்பொழுது நான் உங்களோடு இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ஆகாய் தீர்க்கதரிசனம் சொன்னான்.சகரியா தீர்க்கதரிசி மூலமாக ஆண்டவர், இதற்கு முன்னால் உங்கள் வாழ்க்கை, வேலையால் எந்த பலனும் இல்லை, சமாதானம் இல்லை, எத்தனையோ விரோதிகளை சந்தித்தீர்கள். சக 8:11-15-ல் இனி இந்த ஜனத்தில் மீதியானவர்களுக்கு நான் முந்தின நாட்களில் இருந்தது போல இருக்க மாட்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். விதைப்பு சமாதானமாயிருக்கும், திராட்சை செடி தன் கனியை தரும், பூமி தன் பலனைத் தரும், வானம் தன் பனியை தரும், இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்க கட்டளையிடுவேன். சம்பவிப்பது என்னவென்றால் யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாய் இருந்தது போலவே ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன், பயப்படாதேயுங்கள். உங்கள் கைகள் திடப்படக்கடவது, உங்களுக்கு நன்மை செய்ய திரும்ப நினைத்தேன் பயப்படாதேயுங்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஒரு வேளை குறைவுகள் என் வாழ்வில் இருந்தாலும், நீர் என்னை எச்சரிக்கும் போது, என்னை சீர்படுத்திக் கொள்ள உமது இரக்கத்தைப் பெற, எனக்கு உதவி செய்யும் என்று ஜெபம் பண்ணினால் என் ஆவியானவர் உங்களில் நிலை கொண்டிருப்பார் என்று ஆகாய் சொல்லுவது போல, இஸ்ரவேலுக்கு பனியை போல் இருக்கிற தேவன் தமது வார்த்தையாலும், ஆவியாலும் பனியாக மாத்திரமல்ல மழையாகவும் நம்மை நிரப்பி லீலிப் புஷ்பத்தை போல நாம் மலர, வேரூன்றி நிற்க நமக்கு பெலன் தருவார். யாக்கோபு வேர் பற்றி, பூத்து காய்த்து உலகத்தை பலனால் நிரப்பும் நாட்கள் வருகிறது என்று சொன்ன ஆண்டவர், நான் உலகத்தை பலனால் நிரப்ப, நமக்கு பனியைப் போல இறங்கி, வேத வார்த்தையால் நம்மேல் இறங்கி ஆவியினால் நம்மை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி நிலை நிறுத்துவாராக.



வானத்தின் வாசலில் நடைபெற்ற

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

நம் ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய
இயேசு கிறிஸ்துவின் பெரிதான
கிருபையினால் ஒவ்வொரு மாதமும்
நமது வானத்தின் வாசல் சுவிசேஷ
மையத்தில் வைத்து நடைபெறும்
ஆசீர்வாத உபவாச ஜெபங்களை தேவன்
அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார்.
கடந்த மாதத்தில் நடைபெற்ற
கூட்டங்களில் தேவன் அநேக புதிய
ஆத்துமாக்களை அழைத்து வந்து
அவருடைய நாமம் மகிமைப்பட
செய்தார். ஜெபத்திற்கு வந்திருந்த
ஒவ்வொருவரும் தேவனுடைய
ஆசீர்வாதத்தை பெற்று
மனமகிழ்ச்சியோடு கடந்து செல்ல தேவன்
கிருபை செய்தார். பாடல் ஆராதனை
வேளையில் சகோதரி அவர்கள் பாழாய்
போன, கெட்டுப்போன நிலையிலுள்ள நம்
வாழ்க்கையை ஆண்டவர் இந்த நாளில்
சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, மற்றவர்களுக்கு
ஆசீர்வாதமுள்ளதாக மாற்றுவார் என்று
தேவனுடைய வழிநடத்துதலின்படி
ஜனங்களை ஆராதனைக்குள் வழி
நடத்தி, அவர்களை அர்ப்பணிக்க
செய்தார்கள். மேலும் நம் சகோதரர்
அவர்கள் பயப்படாதே, உன்னை மீட்டுக்
கொண்டேன், உன்னை பெயர் சொல்லி
அழைத்தேன், நீ என்னுடையவள், நீ
ஆறுகளை கடக்கும் போது நான்
உன்னோடு இருப்பேன், அக்கினியில்
நடக்கும்போது வேகாதிருப்பாய் என்றும்,
எந்த சூழ்நிலையிலும் தேவன் நம்மோடு
இருந்து நம்மை வழி நடத்துவார், நாம்
கலங்கத் தேவையில்லை என்று சொல்லி
தேவனுடைய வார்த்தையை
ஜனங்களுக்கு அறிவித்தார்கள். வந்திருந்த
ஒவ்வொருவரும் கண்ணீரோடு தங்களை
தேவனுக்கு அர்ப்பணித்து, தேவ
வார்த்தையினால் அவர்களுடைய
வாழ்க்கையை கட்டி எழுப்பப்பட
தேவன் கிருபை செய்தார் தேவனுக்கே
மகிமை உண்டாவதாக. நீங்களும் இந்த
உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு
தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்ல
உங்கள் யாவரையும் அன்போடு
அழைக்கிறோம்.







மதுரையில் நடைபெற்ற

# எழுப்புதல்

## உபவாச ஜெபம்

தேவ கிருபையினால் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை தோறும் மதுரை பழங்காநத்தம் பைபாஸ் ரோட்டில் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரத்தில் வைத்து இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் சார்பாக எழுப்புதல் உபவாச ஜெபத்தை நடத்த தேவன் கிருபை செய்கிறார். ஒவ்வொரு மாதமும் புதிய ஆத்துமாக்கள் அநேகர் வந்து இந்த உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்கிறார்கள். தேவன் பாராட்டி வருகின்ற கிருபைக்காக அவருக்கு நன்றி சொல்லுகிறோம். ஜெத்தின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவனுடைய பிரசன்னம் அளவில்லாமல் அந்த இடத்தையும், வந்திருந்த சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவரையும் நிரப்பினது. அனைவரும் ஆவியில் களிகூர்ந்தார்கள் புதிதாக வந்த ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையினால் தொடப்பட்டு தங்களை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்தார்கள். ஆவிக்குரிய ஆகாரம் மாத்திரமல்ல சரீரப்பிரகாரமான உணவும் கொடுக்க தேவன் அநுக்கிரகம் செய்தார். அவருக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக ஆமென்.

# தடைகளை தகர்த்து தலைநிமிரச் செய்தார்



**சகோதரி. சண்முகப்பிரியா - திண்டுக்கல்**

நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவள். எனக்காக, என் குடும்பத்தினருக்காக ஜெபிக்கும்படி இயேசு வாழ்கிறார் ஊழியத்தில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். அவர்களின் ஊக்கமான ஜெபத்தினால் தடைகளை தகர்க்கும் தேவன் எங்கள் வாழ்க்கையில் இருந்த தடையை தகர்த்து என் அண்ணனுக்கு ரயில்வே துறையில் வேலை கிடைக்கச் செய்தார். அதுமாத்திரமல்ல எங்களுக்கு கோட்ரஸ் வீடும் கிடைக்கச் செய்து உறவினர்கள், நண்பர்கள் முன்பாக எங்கள் தலையை நிமிரச் செய்து, எங்களை சாட்சியாக வாழ வைத்திருக்கிற தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. பிரைஸி — மதுரை**

கடந்த கல்வியாண்டில் என் இரண்டு மகன்களுடைய படிப்பு மற்றும் எதிர்காலத்திற்காக ஜெபிக்குமாறு இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். இயேசப்பா ஜெபத்திற்கு பதில் தந்து, தேர்வு காலங்களில் எந்த வியாதி பெலவீனங்களும் அனுகாமல் காத்து, நல்ல மனநிலையைத் தந்து முத்தமகன் பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்விலும், இளையமகன் பத்தாம் வகுப்பு பொது தேர்விலும் முதல் தரமான மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற தேவன் கிருபை செய்தார். மேலும் இருவரும் மேற்படிப்பிற்குச் செல்லவும், தேவைகள் சந்திக்கப்படவும் தேவன் கிருபை செய்தார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.

**சகோதரி. மாயா - திருவண்ணாமலை**

கடந்த சில நாட்களாக என் வேலையில் பல போராட்டங்கள் இருந்தது. நானும் ஒவ்வொரு அதிகாரியிடம் போய் கேட்டாலும் திரும்ப முயற்சி செய்ய என்று சொல்வார். ஆனால் ஒரே தடையாகவே இருந்தது.. தினமும் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தடைகள் உடைய, அதிகாரிகள் கண்களில் தயவு கிடைக்க ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள் தேவன் அற்புதம் செய்தார், வேலையில் இருந்த தடைகள் உடைந்தது, மனநிம்மதி கிடைத்தது. தேவனுக்கே மகிமை.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

## இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்,
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமையமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

**1. BANK TRANSFER**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | : L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

**2. இணையதளம் (WEBSITE)**

**WWW.JESUSLIVES.IN**

**3. காசோலை (CHEQUE):**

**JESUS LIVES TRUST (OR)**
**L.VINCENT RAJ**

**4. GOOGLE PAY :**

**GPAY TO: 944 300 9333**

**5. மணியார்டர் (E.M.O)**

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஜ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை,
மதுரை - 625 402.

**6. Whatsapp மூலம்**

9442800449 என்ற எண்ணிற்கு Donate என்று டைப் செய்து அனுப்பி whatsapp மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று காணிக்கைகளை வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம்.
காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 447 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு
செய்தி

# ஏஐ மனித கட்டுப்பாட்டை மீறும், அடுத்து என்ன நடக்கும் தெரியுமா?




செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சியும், அதே நேரத்தில் அது மனிதக்குலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய ஆபத்துகள் குறித்த அச்சமும் உலகளவில் அதிகரித்து வருகின்றன. இந்தச் சூழலில், க்ளாட் ஏஐ டூலை உருவாக்கிய 'ஆந்த்ரோபிக்' நிறுவனத்தின் இணை நிறுவனரும் சிஇஓ-வுமான டாரியோ அமோடி, ஏஐ தொழில்நுட்பம் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிடுமோ என்ற அச்சம் தனக்கு இருப்பதாக வெளிப்படையாகவே பேசியுள்ளார். இந்த காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடையும் துறை என்றால் அது ஏஐ தான். நாம் கண்ணிமைக்கும் நேரத்தில் ஏஐ துறையில் ஏகப்பட்ட வளர்ச்சிகள் குவிந்து கொண்டே போகிறது. இவ்வளவு வேகமாக வளர்ச்சி இருக்கும் அதேநேரம் இதில் ஆபத்தும் இருப்பதாகவே பலரும் கூறி வருகிறார்கள். இதற்கிடையே பிரபல க்ளாட் ஏஐ டூலை உருவாக்கியுள்ள 'ஆந்த்ரோபிக்' (Anthropic) நிறுவனத்தின் இணை நிறுவனரும் சிஇஓ-வுமான டாரியோ அமோடி ஏஐ வளர்ச்சி தொடர்பாகச் சில கவலைகளைப் பகிர்ந்துள்ளார். புளூம்பெர்க் ஆவணப்படம் ஒன்றில் பேசிய அமோடி, ஏஐ-ஐ பாதுகாப்பாக வைத்திருக்க நாம் செய்யக்கூடிய அனைத்தையும் செய்கிறோமா? நிச்சயமாக, முடிந்தவரை முயற்சி செய்கிறோம்' என்று குறிப்பிட்டார். இருப்பினும், ஏஐ தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைக் குறைத்தோ அல்லது தற்காலிகமாக நிறுத்தியோ வைக்க வேண்டும் என்று அவர் உலகளாவிய ஏஐ நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏஐ டூல்கள் சமூகத்தின் மீது என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை முழுமையாகப் புரியும் வரை இத்தகைய வேகம் தேவையில்லை என்பது அவரது கருத்து. ஆபத்து - 50 சதவீதத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள், ஏஐ தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் தாங்களோ அல்லது தங்கள் குடும்ப உறுப்பினர்களோ வேலை இழக்க நேரிடும் என்று அஞ்சுவதாக ராய்ட்டர்ஸ் கருத்துக்கணிப்பு கூறுகிறது. இந்தக் கவலை வயது, பாலினம் மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றைக் கடந்து அனைத்துத் தரப்பு மக்களிடையே பரவலாக உள்ளது.ஏஐ நிறுவனங்களுக்கு இடையேயும் இது குறித்த முரண்பாடுகள் உள்ளன. சாட்ஜிபிடியை உருவாக்கியுள்ள ஓபன் ஏஐ நிறுவனத்திலேயே பலரும் இது தொடர்பாகக் கவலை எழுப்பியுள்ளனர். மேலும், பல மூத்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இணை நிறுவனர்கள் வெளியேறினர். லாபத்தை விட பாதுகாப்பு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஓபன் ஏஐ சிஇஓ சாம் ஆல்ட்மேன் சமீபத்தில் மன்னிப்பு கோரியதுடன், எதிர்காலத்தில் பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய ஏஐ-ஐ உருவாக்குவதில் கவனம் செலுத்தப்போவதாக அறிவித்துள்ளார். ஏஐ தடை செய்யப்படலாம் ஏஐ தொழில்நுட்பம் ஒரு கட்டத்தில் தடை செய்யப்பட வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கு, 'அது ஒரு சாத்தியமான ஒன்றுதான்' என்று அமோடி பதிலளித்தார். ஏஐ தொழில்நுட்பம் ஏதேனும் பெரும் விபரீதத்தை ஏற்படுத்தினால், அதனைத் தடை செய்வது நியாயமானது என்பதே அவரது பதிலாக இருக்கிறது. ஏஐ அமைப்புகளை வெளியிடும் முன், அரசுத் தரப்பிலிருந்து கடுமையான பாதுகாப்புச் சோதனைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று அமோடி வலியுறுத்தியுள்ளார். ஏஐ நிறுவனங்கள் வெளிப்படைத்தன்மையோடு சேர்த்து அரசு தரப்பு கட்டுப்பாடுகளும் தேவை என்பது அவரது வாதம். இது தொடர்பாக அவர் மேலும், 'ஏஐ அமைப்புகளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வெளியிடும் முன், மூன்றாம் தரப்பு சுதந்திரமான சோதனைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren 54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002




தொடர்புக்கு : 94980 00449, 94428 00449



RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023

Jesus Lives MINISTRIES

ஆகஸ்ட்
08
சனிக்கிழமை
9 30 AM - 2 00 PM

# ஆசீர்வாத

## உபவாச ஜெபம்




இடம்: வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.

தொடர்புக்கு : 94980 00449, 94428 00449

To

If Undelivered (Please Return To)
**YESUVAI THINAM PARKIREN**
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.